Dated: 09.05.2025 (நேரம் : நண்பகல் 12.14 மணி)

SC.No: 142/2021 அ.சா. 1 திரு. மோகன்ராஜ்

(1ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டது)

(மனுவின்பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மண்டபத்தில் என் வீடு எந்த தெருவில் உள்ளது என்றால் வளையர் தெருவில் உள்ளது. என் வீடு சுற்றுச்சுவருக்குள் உள்ளது என்றால் சரிதான். அந்த சுற்றுச்சுவருக்குள் 18 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த 18 வீடுகளும் ராஜகனியம்மாள் என்பவருக்கு பாத்தியமாக இருந்தது என்றால் சரிதான். அந்த ராஜகனியம்மாள் எனது பாட்டி என்றால் சரிதான். அப்பாவின் அம்மா. ராஜகனியம்மாளுக்கு ஒரே மகன் தான் வாரிசு என்றால் சரிதான். ராஜகனியம்மாள் மகனுக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் 6 பேர். ராஜகனியம்மாளின் சொத்துக்களில் அவரின் வாரிசுகள் அனைவருக்கும் பங்கு உண்டு என்றால் சரியல்ல. ராஜகனியம்மாள் எழுதி வைத்த உயிலின்படி 4 நபர்களுக்கு மட்டுமே பாத்தியம். உயிலின் படி யார் யாருக்கு சொத்து பாத்தியம் இல்லை என்றால் மகனின் மகள்களான (பேத்திகள்) கௌசல்யா மற்றும் தனபாக்கியம். ராஜகனியம்மாள் எந்த வருடம் உயில் எழுதி வைத்தார் என்றால் 1998ம் ஆண்டாக இருக்கலாம். ராஜகனியம்மாளின் இறப்பு சான்றிதழ் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை. ராஜகனியம்மாள் உயில் எழுதி விட்டதாக சொல்லப்படும் ஆண்டிற்கு 4 வருடங்களுக்கு முன்பாகவே அவர் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. ராஜகனியம்மாள் எழுதி வைத்த உயில் என்வசம் தற்போதும் உள்ளது என்றால் சரிதான். நான் கூறும் உயிலின்படி உயிலில் கண்ட சொத்துக்கள் மேற்படி 18 வீடுகளும் என்றால் சரிதான். தற்போது அந்த 18 வீடுகள் மற்றும் வீடுகள் அமைந்துள்ள இடத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் தெரியாது. அந்த 18 வீடுகளில் எனக்கும்

பங்கு உண்டு என 1ம் எதிரி கௌசல்யா கேட்டு வந்தார் என்றால் என்னிடம் கேட்கவில்லை. என் சகோதரர் ரத்தினவேலிடம் கேட்டு வந்தார். அவ்வாறு பங்கு கேட்டு வந்த பிறகு தான் எனக்கும், என் சகோதரர்களுக்கும் மற்றும் கௌசல்யாவுக்கும் பிரச்சனை என்றால் சரிதான். இவ்வழக்கு புகார் கொடுப்பதற்கு முன்பாக கௌசல்யா எங்களிடம் சொத்து கேட்டது சம்மந்தமாக பிரச்சனைகள் ஏற்பட்டு என் மீதும், என் சகோதரர்கள் மற்றும் அவரது குழந்தைகள் மீதும் கௌசல்யாவை தாக்கிவிட்டதாக இரண்டு புகார்கள் கொடுத்துள்ளார் என்றால் புகார் கொடுத்துள்ளார். சொத்து சம்மந்தமாக கொடுக்கவில்லை. கௌசல்யா கொடுத்த புகாரின் அடிப்படையில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஒரு வழக்கில் மண்டபம் போலீசார் வழக்கில் உண்மை இல்லை என இராமேஸ்வரம் நடுவர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்து அந்த அறிக்கையை ஆட்சேபித்து மனுதாக்கல் செய்து மனு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் எனக்கு தெரியாது. தனபாக்கியம் எனது அக்கா. கவிதரன் எனது மகன். பத்ரகாளி எனது மனைவி. 1ம் எதிரியின் மகன் துரை என்மீதும், என் மனைவி, சகோதரி மற்றும் மகன் மீதும் 01.07.2020ம் தேதி மண்டம் காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்து மண்டபம் காவல்நிலைய குற்ற எண். 275/2020 என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராஜகோபால் என்பவர் எனது சகோதரி தனபாக்கியத்தின் கணவர். 05.01.2018ல் 1ம் எதிரி கௌசல்யா தன்னை தாக்கியதாக எனது மகன் கவிதரன் மீதும், தனபாக்கியம் மீதும் ஒரு புகார் கொடுத்து மண்டபம் காவல்நிலையத்தில் குற்ற எண். 03/2018 என பதிவாகி உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரி கௌசல்யா என்னிடமும், என் சகோதரரிடமும் அடிக்கடி பங்கு கேட்டு வந்ததால் நாங்கள் அவரை தாக்கியதால் தான் அவர் மேற்சொன்ன 2 புகார்களை எங்கள் மீது கொடுத்துள்ளார் என்றால் அந்த புகாரில் உண்மை இல்லை. 1ம் எதிரி கௌசல்யா என் மனைவி, தங்கை, மகன் மீது கொடுத்த புகார் விவரம் எனக்கு

தெரியும் என்றும், 1ம் எதிரி அவரது மகன் மற்றும் 1ம் எதிரியின் மைத்துனர் சண்முகவேல் மீது புகார் கொடுத்தால் அவர்கள் பங்கு கேட்டு வரமாட்டார்கள் என நான் இந்த வழக்கு புகாரை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கும், மண்டபம் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தோராயமாக 1 -1.50 கி.மீ தூரம் இருக்கும். நடந்து சென்றால் கூட என் வீட்டிலிருந்து மண்டபம் காவல்நிலையத்திற்கு அரை மணி நேரத்தில் சென்று விடலாம் என்றால் முக்கால் மணி நேரம் ஆகும். நான் மண்டபம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் நானே எழுதி கொடுத்த புகார் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் எங்களது குடும்பத்திற்கு பாத்தியமான என் தாத்தாவழி சொத்து மொத்தம் 18 வீடுகள் உள்ளது என கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் புகாரில் தவறுதலாக தாத்தாவழி சொத்து என கூறிவிட்டேன். எனது புகாரில் சம்பவம் 29.03.2021 ம் தேதி காலை சுமார் 11.15 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் 30.03.2021ம் தேதி தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என் வீட்டிற்கு முன்பாக தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு வடக்கு பக்கமும், தெற்கு பக்கமும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகளில் ஆட்கள் குடியிருக்கிறார்கள் என்றும், 29.03.2021 ம் தேதி நடந்த சம்பவம் அவர்களுக்கு தெரியும் என்றால் ஒரு சில நபர்களுக்கு தெரியும். எல்லோருக்கும் தெரியாது. என் வீட்டிற்கு முன்னால் உள்ள தென்வடல் ரோட்டில் வந்து தான் எதிரிகள் சண்டை போட்டதாக நான் புகாரில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். புகாரில் நானும், 1ம் எதிரியும் சொத்து சம்மந்தமாக பேசினோம் என கூறியுள்ளேன், வழக்கு சம்பவத்திற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு பேசினோம் என்றால் 15 அல்லது 20 நாட்களுக்கு முன்பு. சொத்து சம்மந்தமாக பேசும்போது பொதுவான நபர்கள் வந்தார்களா என்றால் எங்கள் தரப்பில் யாரும் வரவில்லை. 1ம் எதிரி தரப்பில் யாரும் வந்தார்களா என்று

தெரியாது. 15 அல்லது 20 நாட்களுக்கு முன்பு நடந்த பேச்சு வார்த்தையில் 1ம் எதிரி தரப்பில் பஞ்சாயத்தார்கள் வந்தார்கள் என்றும் அவர்கள் பேச்சு வார்த்தையில் 1ம் எதிரிக்குரிய பங்கை திருப்பி கொடுத்துவிடுங்கள் என கூறினார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு பஞ்சாயத்தார்கள் சொன்னதாலும் எதிரிகள் மீது எங்களுக்கு கோபம் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் எதிரிகள் என் வீட்டிற்கு வந்து என்னைப் பார்த்து வீட்டை காலி செய்து விட்டு போங்கள் எனச் சொன்னார்கள் கூறியுள்ளது போல் நான் கொடுத்த புகாரிலும், போலீசார் என்னை விசாரிக்கும் போதும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் குடியிருக்கும் வீட்டிற்கு வாசல் எந்த திசை நோக்கி உள்ளது என்றால் வடக்கு. எதிரிகள் என் வீட்டு வாசலுக்கு முன்பு நின்று கொண்டு தான் அவ்வாறு சொன்னார்களா என்றால் என் வீட்டிற்கு முன்னாலும், எதிரி வீட்டிற்கு முன்னாலும் நின்று கொண்டு சொன்னார். என்னுடைய முதல் விசாரணையில் எதிரிகள் சத்தம் கேட்டு வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்தபொழுது சண்முகவேல் கையில் வாள் வைத்திருந்ததாகவும், துரை கையில் அருவாள் வைத்திருந்ததாகவும் சொன்னது போல் புகாரிலும், போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மூவரும் என்னை கெட்ட வார்த்தையால் திட்டியதாக போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் 2, 3 எதிரிகள் பட்டா கத்தி மற்றும் அருவாள் வைத்திருந்ததை பார்த்து நான் வீட்டிற்குள் சென்றுவிட்டேன் என சொல்லியுள்ளது போல் போலீசார் என்னை விசாரிக்கும்போது வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் 2, 3 எதிரிகள் அருவாள் மற்றும் வாளுடன் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என சொல்லியுள்ளது போல் போலீசார் என்னை விசாரிக்கும்போது வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. முதல்

விசாரணையில் என் வீட்டில் குடியிருந்தவர்களையும் எதிரிகள் கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள் என சொல்லியுள்ளது போல் போலீசார் என்னை விசாரிக்கும்போது வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் 1ம் எதிரி கௌசல்யா என்னை வெட்டினால் தான் சொத்தில் பங்கு கிடைக்கும் என கூறினார் என சொல்லியுள்ளது போல் புகார் மனுவிலும் போலீசார் என்னை விசாரிக்கும்போதும் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் எதிரிகள் வெட்டுடா என்று சொல்லும்போது நான் என் வீட்டிற்குள் பின்வாங்கினேன் என சொல்லியுள்ளது போல் புகார் மனுவிலும் போலீசார் என்னை விசாரிக்கும்போதும் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் 1ம் எதிரி என் மனைவியை பார்த்து வெட்டிவிடுவேன் என மிரட்டினார் என் சொல்லியுள்ளது போல் புகார் மனுவிலும் போலீசார் என்னை விசாரிக்கும்போதும் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் 1 முதல் 3 எதிரிகள் என் வீட்டிற்கு வரவில்லை என்றும், 3ம் எதிரி தன் கையில் வாள் வைத்திருக்கவில்லை என்றும், 2ம் எதிரி தன் கையில் அருவாள் வைத்திருக்கவில்லை என்றும் நான் சொன்னது போல் சண்டை எதுவும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் மீது எதிரிகள் புகார் கொடுத்துள்ளதாலும் எதிரிகள் மீது புகார் கொடுத்தால் அவர்கள் சொத்து கேட்டு வரமாட்டார்கள் என இவ்வழக்கு புகாரை பொய்யாக ஜோடித்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

(ஒம்/– சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.